# කාර්ය සාධන වාර්තාව 2018
# செயல் நிறைவேற்ற அறிக்கை 2018
# Performance Report 2018

තැපැල් සේවා හා මුස්ලිම් ආගමික කටයුතු අමාත්‍යාංශය

அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு

**Ministry of Postal Services and Muslim Religious Affairs**

# செயல் நிறைவேற்ற அறிக்கை 2018

## அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு

அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு
6 மற்றும் 7 ஆம் மாடி,
அஞ்சல்தலைமையகக் கட்டிடம்
இல. 310, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

## உள்ளடக்கும்


பக்க இல.

- ❖ அறிமுகம் 1 - 3
- ❖ தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள் 4 - 9
- ❖ அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள் 10 - 17
- ❖ விசேட தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் 18 - 21
- ❖ உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் 22
- ❖ நிதி நடவடிக்கைகள் 23 - 24

- ❖ இணைப்பு 01 - அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு
- ❖ இணைப்பு 02 - அமைச்சின் பதவியணி விபரம்

# தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு

## அறிமுகம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2103/33 ஆம் இலக்க 2018.12.28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த அமைச்சின் கீழ் கொள்ளப்படுகின்ற நிறுவனங்கள் பின்வருமாறாகும்.

- தபால் திணைக்களம்
- முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

இந்த அமைச்சு இதற்கு முன்னர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2096/68 ஆம் இலக்க 2018.11.09 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சு தாபிக்கப்பட்டதுடன், தபால் திணைக்களம் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் மற்றும் அதன் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கம்பனிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தொலைத்தொடர்புகள் திணைக்களம் ஆகியன இந்த அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சு தாபிக்கப்பட முன்னர். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1933/13 ஆம் இலக்க 2015.09.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு தாபிக்கப்பட்டதுடன், தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இந்த அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்தன.

அதற்கமைய, தற்போது இந்த அமைச்சு தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு என்றழைக்கப்படுவதுடன், இதன் நோக்கு, செயற்பணி, அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள், நோக்கங்கள் மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

## நோக்கு

மிகச்சிறந்த, வினைத்திறன்மிக்க தபால் சேவை மற்றும் இஸ்லாமிய சமய மற்றும் கலாசார அலுவல்களை மேம்படுத்தல்.

## செயற்பணி

நம்பகமானதும், உயர் தரம்மிக்கதுமான தபால் சேவையை தாங்கிக்கொள்ளக்கூடிய விலையில் பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும், இலங்கை வாழ் முஸ்லிம் சமுதாயத்தின் சமய மற்றும் கலாசார அலுவல்களை மேம்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதும்.

**நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டங்கள்**

1. முத்திரைகள் கட்டளைச் சட்டம் (1909 இன் 22 ஆம் இலக்கம்)
2. அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டம் (1908 இன் 11 ஆம் இலக்கம்)
3. முஸ்லிம் பள்ளிவாயல்கள், மற்றும் முஸ்லிம் அறக்கட்டளைகள் அல்லது வக்புகள் சட்டம் (1956 இன் 51 ஆம் இலக்கம்)

**நோக்கங்கள்:**

1. தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் விடயங்கள் சம்பந்தமான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயார் செய்தல்.
2. செலவினத்தைக் குறைத்து பொது மக்களுக்கு மிகவும் இலாபகரமானதும், வினைத்திறன்மிக்கதும், நட்புறவானதுமான தபால் சேவையை வழங்குதல்.
3. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூகோள போக்குகளுடன் ஒத்திசைந்த வகையில் தபால் சேவையினை நவீனமயப்படுத்தி விஸ்தரித்தல்.
4. தபால் சேவையின் தரம், நியமங்கள் மற்றும் மேம்படுத்தலை உறுதிசெய்தல்.
5. உள்நாட்டுத் தபால் தொடர்பாடல் சேவைக்குச் சமாந்தரமாக நிதிச் சேவை வசதிகளை கிராமிய மட்டம் வரை விஸ்தரித்தல்.
6. முகவராண்மை சேவைகளை ஆற்றும் பரப்பெல்லையை விஸ்தரித்து தபால் அலுவலகங்களை மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு சேவைகளையும் ஆற்றுகின்ற அலகொன்றாக வலுவூட்டல்.
7. அங்கீகரிக்கப்பட்ட முத்திரைக் கொள்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.
8. நினைவு முத்திரைகள் மற்றும் அது சம்பந்தமான ஆகக்கங்களை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் தனித்துவத்தையும், பெருமையையும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லல்.
9. சர்வதேச தபால் சங்கத்தின் அங்கத்துவ நாடு என்ற வகையில் அதன் ஒழுங்குறுத்தல்களுக்கு அமைய இலங்கையின் தபால் சேவையை சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்றவாறு சர்வதேச தபால் சேவையை மேம்படுத்தல்.
10. முஸ்லிம் பள்ளிவாசல்கள், இஸ்லாமிய சமய நிறுவனங்கள், அறக்கட்டளை நிதியங்கள் என்பவற்றின் சொத்துக்களை நிருவகித்தல்.
11. இஸ்லாமிய மார்க்கக் கல்வி, இஸ்லாமிய கலாசார அம்சங்களை போசிப்பதும், மேம்படுத்துவதும்.
12. முஸ்லிமான ஒவ்வொருவரும் ஒரு முறையேனும் ஹஜ் கடமையினை நிறைவேற்றச் செல்வதற்காக மிகவும் நியாயமான முறையியல் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அரச தலையீட்டை உறுதி செய்தல்.
13. மீளாதுன் நபி வைபவத்தை நோக்காகக் கொண்டு முஸ்லிம் சமய, கலாசார மற்றும் சமுதாய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
14. ரமழான் நோன்பினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்தல்.

**பணிகள்**

1. தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் சம்பந்தமான அரச கொள்கைகளைத் தயார் செய்வதும், அமுல்படுத்துவதும்.
2. அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களையும் வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.
3. தபால்துறை மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. தபால் துறை மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் தொடர்பான சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருவதும், அத்தொடர்புகளை மேம்படுத்துவதும்.

5. தகவல் தொழில்நுட்பச் துறையின் அபிவிருத்திக்கு இசைவாக திணைக்களத்தின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

6. சர்வதேச தரநியமங்களுக்கு அமைவாக தபால் சேவைகளைப் பேணிவருவதும், வழிநடாத்துவதும்.

7. அதிவேக தபால் மற்றும் பொதிச் சேவைகள் மற்றும் சகல நிதிசார் சேவைகளையும் தபால் அலுவலகக் கட்டமைப்பின் ஊடாக விஸ்தரிப்பதை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.
8. அரச மற்றும் தனியார் துறையின் பங்கேற்பின் ஊடாக வினைத்திறனும், உற்பத்தித்திறனும், தரமும்மிக்க தபால் சேவையைப் பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

9. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு, நிதிப் பரிமாற்றல் சேவைகளை மேம்படுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

10. சர்வதேச தபால் சங்கத்தின் மற்றும் ஆசிய பசுபிக் தபால் சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான அரச ஒருங்கிணைப்பாளர் என்ற வகையில் தபால் திணைக்களத்தை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

11. தபால் மற்றும் உப தபால் அலுவலக கட்டமைப்பின் ஊடாக காசுப் பரிமாற்றம், காப்புறுதிச் சேவைகள் மற்றும் வங்கி மற்றும் ஏனைய நிதிச் சேவைகளை ஆரம்பிப்பதும், தற்போது காணப்படுகின்ற முகவராண்மைச் சேவைகளை மேம்படுத்துவதை கண்காணிப்புச் செய்வதும்.

12. முத்திரைக் கொள்கைக்கு இசைவாக உள்நாட்டுத் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு தபால் முத்திரை மற்றும் வருமான முத்திரைகளை வடிவமைத்தல், அச்சிடல், வெளியிடல், சந்தைப்படுத்தல் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டை நல்ல முறையில் பேணிவருவதைக் கண்காணிப்புச் செய்தல்.

13. நினைவு முத்திரைகள் மற்றும் அது தொடர்பான ஆக்கங்களை அவற்றின் தரத்தைப் பாதுகாக்கும் வகையில் வடிவமைத்தல், அச்சிடல், வெளியிடல் மற்றும் சந்தைப்படுத்துவதை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

14. வக்பு சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதும், வக்பு சபையின் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்வதும்.

15. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மீலாதுன் நபி வைபவத்திற்கென திரண்ட நிதியிலிருந்து ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள நிதியை முஸ்லிம் சமய நிறுவனங்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

16. புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம் நாடுகளில் இருந்து அன்பளிப்பாக எமது நாட்டுக்கு கிடைக்கும் பேரீத்தம் பழங்களை சகல முஸ்லிம் குடும்பங்களையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட மட்டத்தில் விநியோகித்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

17. ஹஜ் யாத்திரை தொடர்பாக சவுதி அரசாங்கத்துடன் தேவையான சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்புச் செய்தல், ஹஜ் யாத்திரையை ஒழுங்கு செய்யும் அமைப்புக்களை தெரிவு செய்தல், ஹஜ் பங்கினை (ஞரழவய) முறையாக பகிர்ந்தளித்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

**2018.01.01 ஆம் திகதி முதல் 2018.12.31 ஆம் திகதி வரையான முன்னேற்றம்**

தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 2018.01.01 ஆம் திகதி முதல் 2018.12.31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 01. தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள்

நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பற்றிய தகவல்கள் இணைப்பு 1 மற்றும் இணைப்பு 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான செயற்பணி பற்றிய பொழிப்புரை கீழே தரப்பட்டுள்ளது.

(1) அமைச்சின் பதவியணியினர் மற்றும் அதன் கீழுள்ள தபால் திணைக்களம், முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் சேவையாற்றும் ஊழியர்களின் தாபன நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
(2) அமைச்சின் நிருவாக நடவடிக்கைகளை வழிநடாத்தல்
(3) அமைச்சின் ஊடக நடவடிக்கைகளை நிறைவேற்றல்
(4) பாராளுமன்றத்தின் தேவைப்பாடுகள் சம்பந்தமான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

### 1.1 2018.01.01 திகதி முதல் 2018.12.31 வரையான காலப்பகுதிக்குள் அமைச்சின் தாபனப் பிரிவின் நடவடிக்கைகள் பற்றிய முன்னேற்றம்

#### 1.1.1 பதவியணியின் தாபன நடவடிக்கைகள்

| பதவிப் பெயர் / சேவை | புதிய பதவிகளை ஏற்படுத்த விண்ணப்பம் சமர்ப்பித்தல் | பதவிகளை ஏற்படுத்துவதற்கான அங்கீகாரம் | புதிய நியமனம் பெற்று வருகை தரல் | இடமாற்றம் | ஓய்வுறுத்தல் | சேவையை நிறைவு செய்தல் | ஆட்சேர்ப்பு | இடமாற்றம் பெற்று வந்தவை | ஏனையன (பதவி விலகல்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு** | | | | | | | | | |
| கௌரவ அமைச்சரின் பதவியணி அலுவலர்கள் | - | - | 41 | - | - | 46 | - | - | - |
| செலயாளர் | - | - | - | 01 | - | - | - | 01 | - |
| மேலதிகச் செலயாளர் | - | - | - | 01 | 01 | - | - | 01 | - |
| பிரதம நிதி அலுவலர் | - | 01 | - | - | - | - | - | 01 | - |
| பணிப்பாளர் | - | 01 | - | - | - | - | - | 01 | - |
| உதவிச் செயலளர் | - | - | - | 01 | - | - | - | - | - |
| மொழிபெயர்ப்பாளர் | - | - | - | 01 | - | - | - | 01 | 01 |
| அபிவிருத்தி அலுவலர் /இணைந்த அலுவலர் | - | - | 03 | 03 | - | - | - | - | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | - | - | 06 | 09 | - | - | - | 03 | - |
| சாரதி சேவை | - | - | 04 | 01 | 01 | 02 | - | 02 | - |
| **தபால் திணைக்களம்** | | | | | | | | | |
| இணைந்த தபால் சேவை | - | - | - | - | 25 | - | - | - | - |
| இலங்கை கணக்காளர் சேவை | - | - | - | 20 | - | - | - | - | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | - | - | - | - | 04 | - | - | - | - |
| **முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்** | | | | | | | | | |
| - | - | - | - | - | - | - | - | - | - |

1. தபால் திணைக்களத்தின் அரச முகாமைத்துவ உதவி அலுலவா்களை இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவித்தல் மற்றும் ஏனையன - 08
2. தபால் திணைக்களத்தின் பொதுவான வினைத்திறனின்மையின் அடிப்படையில் மற்றும் ஓய்வுதிய பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுறுத்தல் - 25
3. தொழில் சங்க நடவடிக்கைகளுக்காக அலுவலா்களை விடுவித்தல - 10

### 1.1.2 இணைந்த தபால் சேவை அலுவலர்களின் நியமனங்களும் பதவி உயர்வுகளும் மற்றும் மேன்முறையீடுகள்.

I. இணைந்த தபால் சேவையின் அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் சேவைக்கு அமர்த்துவதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக,

சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் - 08

அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல் - 04

II. முகாமைத்துவ உதவியாளர் விசேட தரத்தைச் சேர்ந்த உதவித் தபால் அத்தியட்சகர் (புலனாய்வு) ∴ உதவி தபால் அத்தியட்சகர் (கணக்கு பரிசோதகர்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2017 (2018) இற்கான நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்காக நேர்முகப் பரீட்சைக் குழு நியமனம் செய்யப்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

III. தபால் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் 111 ஐச் சேர்ந்த தபால் அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2017 இற்கான விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

IV. நிரந்தர பதவிக்கு மேலதிகமாக பதில் கடமையாற்றுவதற்கு நியமனம் செய்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பது தொடர்பிலான நடவடிக்கைகள்.

- இணைந்த தபால் சேவையின் அ 1 தரத்தைச் சேர்ந்த பிரதித் தபால் மாஅதிபர் பதவி – அலுவலர்கள் 08 பேருக்காக
- இணைந்த தபால் சேவையின் அ 11 தரத்தைச் சேர்ந்த பதவிகள் - அலுவலர்கள் 02 பேருக்காக
- இணைந்த தபால் சேவையின் அ 111 மற்றும் இணைந்த தபால் சேவையின் அ 111 ஆ தரத்தைச் சேர்ந்த பதவிகள் - அலுவலர்கள் 30 பேருக்காக

## 1.2. நிறுவனங்களினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகள் பற்றிய விபரங்கள்

### 1.2.1 அவ்வவ் நிறுவனங்களினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு பதில் அறிக்கைகளை சமர்ப்பிப்பதும் அறிக்கைகளுக்கான கோரிக்கைகளை விடுப்பதும்

| அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்கள் / மேன்முறையீடு | சனாதிபதி செயலகம் | பிரதமர் அலுவலகம் | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | பொது மனுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | ஒம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | தபால் மாஅதிபரிடம் கோரப்பட்ட அறிக்கைகள் | | | மேன்முறையீட்டாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள பதில்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | மேன்முறையீட்டாளர்களிடம் கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை | கோரப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | கிடைத்த அறிக்கைகளின் எண்ணிக்கை | |
| 1. உபதபால் நிலைய பொறுப்பதிகாரி சேவை | - | - | 21 | - | - | - | 02 | 35 | 30 | 13 | 05 |
| 2. தபால் திணைக்களத்தின் கனிட்ட சேவையில் உள்ள பல்வேறு சிக்கல்கள் தொடர்பாக | - | - | 17 | - | - | - | 05 | 50 | 32 | 18 | - |

| அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்கள் / மேன்முறையீடு | சனாதிபதி செயலகம் | பிரதமர் அலுவலகம் | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | பொது மனுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | ஓம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | தபால் மாஅதிபரிடம் கோரப்பட்ட அறிக்கைகள் | | | மேன்முறையீட்டாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள பதில்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | மேன்முறையீட்டாளர்களிடம் கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை | கோரப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | கிடைத்த அறிக்கைகளின் எண்ணிக்கை | |
| 3. இணைந்த தபால் சேவையில் தற்போது ஓய்வு பெற்றுள்ள அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் | - | 15 | 94 | 39 | - | 03 | - | 30 | 184 | 79 | 37 |
| 4. மேன்மை தங்கிய சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் கௌரவ அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் தொடர்பாக | - | - | - | - | - | - | - | - | 57 | - | 31 |
| 5. இணைந்த தபால் சேவையில் ஈடுபட்டிருந்த போது ஒழுக்காற்று உத்தரவு பெற்றுள்ள மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 6. தொழிற்சங்க நடவடிக்கைகள் | - | - | - | - | - | - | - | 18 | 18 | - | - |
| 7. இலஞ்ச ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் வினவுதல் | - | - | - | - | - | - | - | - | 02 | - | - |
| **மொத்தம்** | **-** | **15** | **132** | **39** | **-** | **03** | **07** | **133** | **323** | **110** | **73** |

**1.2.2 இதற்கு மேலதிகமாக பின்வருமாறு அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பிப்பதும் இடம்பெற்றுள்ளது.**

I. பதிலளிக்கப்பட்ட பாராளுமன்ற வினாக்களின் எண்ணிக்கை - 03
II. உள்ளக நிருவாக மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் கடிதங்கள் தொடர்பில் அறிக்கைகளைக் கோரல் - 10
III. அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை - 24
IV. தீர்மானங்கள் கிடைத்துள்ள விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை - 15

**1.2.3 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.**

I. கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை - 60
II. பூர்த்தி செய்த கோரிக்கைகளின் எண்ணிக்கை - 58
III. நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை - 00
IV. நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றவை - 02

**1.2.4 தொழிற் சங்க கலந்துரையாடல்களை நடாத்தல்** - 04

**1.3 தபால் திணைக்கள அலுவலர்களின்,**

| | | |
|---|---|---|
| I. | திடீர் விபத்துக்களுக்கான லீவுகளை அங்கீகரித்தல் | - 28 |
| II. | விசேட லீவு அங்கீகரித்தல் | - 19 |
| III. | பொதுநிர்வாக சுற்றறிக்கை 22/93 இன் கீழ் நட்டஈடு செலுத்தல் | - 13 |
| IV. | பயிலுனர்களை செயன்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தல் | - 26 |
| V. | தபால் பயிற்சி நிறுவனங்களின் போதனாசிரியர்களுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் | - 06 |

**1.4 முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அலுவலர்களின்,**

ை. பதவியணியினருக்கான மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினங்களை அங்கீகரித்தல் :

- கலாசார உதவியாளர் மற்றும் நிதி உதவியாளர் - 01
- அபிவிருத்தி அலுவலா் - 11
- முகாமைத்துவ உதவியாளர் - 02
- அலுவலக சிற்றூழியர் - 02
- சாரதி - 04

**1.5 மேலதிக நேரம், பிரயாணச் செலவினம், சேவைகள் மற்றும் வசதிகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை**

| பணி | செலவு தலைப்பு | உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **சேவைகள் மற்றும் வசதிகள்** | | |
| **வாகனங்கள்** | | |
| பராமரிப்பு | 1301 | 164 |
| எரிபொருள் விநியோகம் | 1202 | 266 |
| காப்புறுதி நடவடிக்கைகள் | | 17 |
| **சேவைகள்** | | |
| நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்கள் | 1403 | 09 |
| துப்பரவேற்பாடு | 1405 | 12 |
| பாதுகாப்பு | | 11 |
| உபசரணை | 1203 | 29 |
| உபகரணம் பராமரிப்பு | 1302 | 39 |
| தொலைபேசி பட்டியல்களைத் தீர்த்தல் | | 551 |
| பத்திரிகை பட்டியல்களைத் தீர்த்தல் | | 165 |
| குடிநீர் போத்தல் வழங்கல் | | 12 |
| வாடகை செலுத்தல் மற்றும் ஏனையன (கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி அமைச்சரின் அலுவலகம்) | 1404 | 16 |
| **மேலதிக நேரம் / பிரயாணச் செலவினம் மற்றும் வேறு கொடுப்பனவுகள்** | | |
| மேலதிக நேரம | 1002 | 235 |

## 1.6 வெளிநாட்டு லீவுகளை அங்கீகரித்தல்

| லீவு | அமைச்சு | தபால் திணைக்களம் | முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் |
|---|---|---|---|
| தனிப்பட்ட | 03 | 170 | 08 |
| தொழில் | - | 10 | - |

## 1.7 பயிலுனர்களுக்கு செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்

| அமைச்சு | தபால் திணைக்களம் | முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் |
|---|---|---|
| - | 26 | - |

## 1.8 தகவல் ஊடகத்துறை அலகின் செயற்பணிகள்

1.8.1 தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்த ஆண்டில் நிறைவேற்றியுள்ள சேவைகள், அபிவிருத்திகள் மற்றும் நலன்புரிப் பணிகள் தொடர்பாக ஊடக அலகு அவற்றுக்கான பிரச்சாரப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்கியுள்ளது.

1.8.2 வெளி ஊடக நிறுவனங்களுடன் மிகநெருக்கமான தொடர்பைப் பேணிவருவதுடன் 120 ஊடக அறிக்கைகள், 20 ஊடகவியலாளர் மாநாடுகள், 600 புகைப்படங்கள் மற்றும் செய்திகள் உள்ளடங்கிய 250 சீடி மற்றும் வீடியோ கசட்கள் பிரச்சாரப் பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளன.

## 1.9 ஏனைய தாபன நடவடிக்கைகள்

**1.9.1** 1. இலவச புகையிரத அனுமதிச் சீட்டுக்களை வழங்குதல் - 41
பட்டியலகளைத் தீர்த்தல் - 10
11. அக்ரஹார காப்புறுதி நட்டஈட்டுக்காக விண்ணப்பித்தல் - 11

**1.9.2** கடன் வழங்குதல்
1. இடர் கடன் வழங்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை - 55

**1.9.3** சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல்
1. அமைச்சின் அலுவலர்களுக்கு - 06
11. தபால் திணைக்கள அலுவலர்களுக்கு - 18
111. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அலுவலர்களுக்கு - 01
1V. ஓய்வுபெற்ற அலுவலர்களுக்காக வர்த்தக மற்றும் முதலீட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல் - 03

**1.9.4** பாராளுமன்றத்துக்கு செலுத்தப்பட்ட பட்டியல்களின் எண்ணிக்கை - 06

**1.9.5** மொழிபெயர்ப்புக்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை - 23

**1.9.6** கௌரவ அமைச்சருக்கு எரிபொருள் விநியோகம், புகைப் பரிசோதனை செய்தல், சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், மேலதிக எரிபொருள் பெற்றுக் கொள்ளல், சில்லறை காசு முற்பணம் மற்றும் வேறு பணிகளுக்கான உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை - 143

**1.9.7** கௌரவ அமைச்சரின் உபசரணை செலவின உறுதிச்சீட்டுக்களைத் தீர்த்தல் - 19

**1.9.8** கௌரவ அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தள செலவின உறுதிச்சீட்டுக்களைத் தீர்த்தல் - 16

**1.9.9** பதவிநிலை அலுவலர்களின் பிரயாணச் செலவின விண்ணப்பங்களை தீர்த்தல் - 09

**1.9.10** பதவிநிலை அல்லாத அலுலவர்கள் மற்றும் அலுவலக சிற்றூழியர் செவையின் மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினங்களை தீர்த்தல் - 116

**1.9.11** பதவிநிலை அலுலவர்களின் 1/20 கொடுப்பனவைச் செலுத்தல் - 26

**1.9.12** உத்தியோகபூர்வ அடையாள அட்டை விநியோகம் - 06

**1.9.13** கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் பதவியணிக்கான பிரயாணச் செலவினம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு விண்ணப்பங்களை தீர்த்தல் - 107

**1.9.14** அனுசரணை புகையிரத பருவச்சீட்டு விண்ணப்பங்களைத் தயார் செய்து புகையிரத திணைக்களத்திற்கு அனுப்பல் - 16

**1.9.15** தபால் திணைக்கள வெளி தொழிலாளிகளின் கடமை நாட்களை சான்றுப்படுத்தல் - 12

**1.9.16** அரசாங்க சேவை சேமலாப நிதியத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் - 04

**1.9.17** அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் - 06

## 1.10 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்

| நிறுவனம் | பதவி நிலை அலுவலர்கள் | | அபிவிருத்தி அலுவலர்கள் | | முகாமைத்துவ உதவியாளர் | | தபால் சேவை மற்றும் ஏனைய அலுவலர்கள | சாரதி | | அலுவலக சிற்றூழியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
| **உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | | | | | | | | |
| அமைச்சு | 07 | 11 | 19 | 24 | 18 | 24 | - | 04 | 01 | 08 | 07 |
| வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ∴ மாநாடுகளில் பங்கேற்றல் | | | | | | | | | | | |
| அமைச்சு | 05 | - | 01 | - | - | - | - | - | - | - | - |
| தபால் திணைக்களம் | 33 | - | - | - | - | - | 14 | - | - | - | - |
| முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | 02 | - | - | - | - | - | - | - | - | - | - |

## 02. அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள்

### 2.1 முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் வருடாந்த செயலாற்றுகை நடவடிக்கைகள்

- தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டுக்கு அமைய 2018 ஆம் ஆண்டின் செயற்றிட்டம் அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 01/2014 இற்கு அமைய தயார் செய்யப்பட்டு நிதி அமைச்சு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் மற்றும் உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தபால் திணைக்களம், முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு அமைய 2018 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தைத் தயார் செய்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- 2017 ஆம் ஆண்டில் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் சம்பந்தமான தகவல்களையும் பெற்றுக்கொண்டு செயலாற்றுகை அறிக்கை தயார் செய்யப்பட்டு பாராளுமன்ற சபாபீடத்தில் வைப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் நிதி அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

- 2017 ஆம் ஆண்டுக்கான தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாக தயார் செய்யப்பட்ட மேற்படி திணைக்களங்களின் செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்ற சபாபீடத்தில் வைப்பதற்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு அனுப்பத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் தொடர்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வது காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தபால் திணைக்களத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பிரேரணைகள் சம்பந்தமாக நடவடிக்கைக் குழுக் கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட்டு அது தொடர்பிலான தீர்மானங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- சனாதிபதி செயலகம், பிரதம அமைச்சர் அலுவலகம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், அரசாங்க தகவல்கள் திணைக்களம், மாவட்ட செயலகங்களினால் வினவப்படுகின்ற தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பற்றிய முன்னேற்றத்தை அறிக்கையிடுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஜனாதிபதிசெயலகத்திற்கும்,கருத்திட்டமுகாமை மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்திற்கும் அறிக்கையிடப்பட்ட விரிவான கருத்திட்டங்கள்/நிகழ்ச்சிநிரல்கள் பற்றிய காலாண்டு முன்னேற்ற அறிக்கை- 2018 பின்வருமாறு.**

- **பௌதீக முன்னேற்றம்**-அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சு.

| **கருத்திட்ட பெயர்** | **ஒதுக்கீட்டு ஏற்பாடுகள் 2018 (ரூ.மி)** | **செலவீனம் (ரூ.மி)** | **பௌதீக முன்னேற்றம்** | |
|---|---|---|---|---|
| | | | **விபரங்கள்** | **%** |
| தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த முஸ்லிம்களின் வணக்கத் தலங்களை மீளுருவாக்கல் | 24.250 | 23.291 | 12 மஸ்ஜித்துக்கள் 12 மாவட்டங்களில் அபிவிருத்திசெய்யப்பட்டன. | 100 |
| முத்திரைகளின் **முன்னேற்றம்** | 1.000 | 0.980 | **அஞ்சல்திணைக்களத்திற்கு** முத்திரைகளின் **முன்னேற்றம் சம்பந்மான ஒதுக்கீடுகள்** | 100 |

➢ **பௌதீக முன்னேற்றம்**-அஞ்சல் திணைக்களம்

| கருத்திட்ட பெயர் | ஒதுக்கீட்டு ஏற்பாடுகள் 2018 (ரூ.மி) | செலவீனம் (ரூ.மி) | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | விபரங்கள் | % |
| அஞ்சல் **அலுவலக கட்டடங்களை புனரமைத்தல்** | 160.000 | 159.094 | நாடளாவியரீதியில் அஞ்சல் **அலுவலக மற்றும்** அஞ்சல் நிறுவனங்களின் **269 கட்டடங்களை புனரமைத்தல்**.. | 98 |
| அஞ்சல் **அலுவலக மற்றும்** அஞ்சல் நிறுவனங்களுக்கும் **அலுவலக உபகரணங்களும், தளபாடங்களும்** வழங்கப்பட்டன. | 32.000 | 31.836 | நாடளாவியரீதியில் **அலுவலக உபகரணங்களும், தளபாடங்களும்** அஞ்சல் **அலுவலக மற்றும்** அஞ்சல் நிறுவனங்களுக்கும் தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்டன. | 99 |
| அஞ்சல் **அலுவலக மற்றும்** அஞ்சல் நிறுவனங்களுக்கும் இயந்திர சாதனங்கள் வழங்கப்பட்டன. | 45.000 | 44.783 | நாடளாவியரீதியில் இயந்திர சாதனங்கள் அஞ்சல் **அலுவலகங்கள் மற்றும்** அஞ்சல் நிறுவனங்களுக்கும் தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்டன. | 98 |
| பூஜாபிட்டியஅஞ்சல் **அலுவலக நிர்மானம்** | 28.600 | 7.619 | நிர்மானத்திற்கான வேலைகளை கட்ட்டத்திணைக்களம் முன்னெடுத்துச்செல்கின்றது.மேலதிக மலைசாரல்வேலைகள் ஏற்பட்டமையால் தாமதமாகிறது. | 65 |
| அஞ்சல் முத்துரைகளின் **முன்னேற்றம்** | 4.00 | 3.499 | இக் கருத்திட்டதின் கீழ் அஞ்சல் திணைக்களத்திறகு ரூ.6மில்லியனும் நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டதுடன் ரூ.1 மில்லியன்நிதி ஒதுக்கீடு அமைசின் மூலம் கிடைக்கப்பெற்று,அவற்றினைக்கொண்டுசிறிய அளவிலான முத்துரை பணியகங்கள் இரண்டை முறையே நீர்கொழும்பு மற்றும் குருநாகலில் அமைக்கப்பட்டது.அத்துடன் அவற்றினை அபிவருத்திசெய்யும் நோக்கில் உபகரண வசதிகளும் வழங்கப்பட்டன. இணையத்த்தளமூடாக முத்திரை கொள்வனவுசெய்யும் வசதிகள் மேன்படுத்தப்பட்டன. நவீன புகைப்படக் கருவி கொள்வனவுசெய்யப்பட்டது. ......... இணையத்தள கருத்திட்டதின் கீழ் ச.அ.ச தின் இணையத்தளத்துடன் இலங்கை முத்திரைகள் பதிவுசெய்யப்பட்டன.உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முத்திரைக் கண்காட்சிகளில் பங்குகொண்டமையாகும். . | 100 |

➢ **பௌதீக முன்னேற்றம் -** முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

| **கருத்திட்டத்தின் பெயர்** | **2018 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா மில்லியன்** | **2018.12.31ஆந் திகதிக்கான செலவினம் ரூபா மில்லியன்** | **பௌதீக முன்னேற்றம்** | |
|---|---|---|---|---|
| | | | **விபரங்கள்** | **%** |
| தேசிய மீளாதுன் நபி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 20.00 | 19.51 | இக் கருத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்ட்களிலுள்ள 55 மசூதிகள் மற்றும் சமய நிறுவனங்கள் புனரமைக்கப்பட்டன. | 100 |
| முஸ்லிம் சமய மற்றும் கலாசார நிலையங்களை மேம்படுத்தல் | 25.00 | 24.28 | இக் கருத்திட்டத்தின் கீழ்,நாடளாவியரீதியில் 121 மசூதிகள் மற்றும் சமய நிறுவனங்கள் புனரமைக்கப்பட்டன | 99 |

- **2018.12.31 ஆம் திகதிக்கு அமைச்சு மற்றும் திணைக்களங்களின் நிதி முன்னேற்றம்**

| நிறுவனம | மீண்டெழும் நிதி | | | மூலதன நிதி | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. | 2018.12.31 ஆம் திகதிக்கு செலவினம் ரூ.மி. | % | 2018 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்ப ட்ட தொகை ரூ.மி. | 2018.12..31 ஆம் திகதிக்கு செலவினம் ரூ.மி. | % | 2018 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. | 2018.12.31 ஆம் திகதிக்கு செலவினம் ரூ.மி. | % |
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 124.905 | 102.509 | 82.0 | 46.065 | 43.026 | 93.4 | 170.970 | 145.535 | 85.1 |
| தபால் திணைக்களம | 12,932.500 | 12,896.557 | 99.7 | 301.600 | 277.881 | 92.1 | 13,234.100 | 13,174.438 | 99.5 |
| முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | 248.200 | 233.789 | 94.2 | 59.700 | 47.702 | 79.9 | 307.900 | 281.491 | 91.4 |
| **மொத்தம்** | **13,305.605** | **13,232.855** | **99.5** | **407.365** | **368.609** | **90.5** | **13,712.970** | **13,601.464** | **99.2** |

- காணிகளை சுவீகரிக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தபால் சேவை நடவடிக்கைகளுக்காக உப தபால் அலுவலகங்கள் மற்றும் தபால் அலுவலகங்களுக்கு காணிகளை சுவீகரித்தல் மற்றும் சுவீகரித்தல் தொடர்பிலான (சுமார் 337 ஆவணக் கோப்புக்கள்) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
  மஹவெல மற்றும் கல்கமுவ தபால் அலுவலகத்திற்கு காணிகளை சுவீகரித்தல் மற்றும் வதுராவ, லிஹிரியாகம தபால் அலுவலகத்திற்கு காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள், பயாகல மற்றும் ஆனமடுவ தபால் அலுவலகங்களுக்கு காணிகளை சுவீகரித்துக் கொள்ளல், சேருகெலே உப தபால் அலுவலகத்தை சுவீகரித்துக் கொள்வது தொடர்பிலான கோப்புகளின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- பூஜாபிட்டிய தபால் அலுவலகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இரண்டாம் கட்டத்தில் காணப்படுகின்றன. இது தொடர்பிலான ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தபால் திணைக்களத்தினால் தற்போது தனியார் துறையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தனியார் பல்வேறு சேவைகள் சம்பந்தமாக உடன்படிக்கை செய்துகொள்வது தொடர்பில் நிதி அமைச்சின் அங்கீகாரம் மற்றும் சட்ட மாஅதிபரின் அறிவுரையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் மேற்படி ஒப்பந்தங்கள் தொடர்பாக தபால் மாஅதிபரின் அறிவுரைகள் மற்றும் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டன.
- அச்சு ஊடகங்களினூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் மற்றும் பிரேரணைகளைக் கவனத்தில் கொண்டு குறித்த சிக்கல்களைத் தீர்த்துவைத்து தபால் சேவைகளை மேம்படுத்தவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சனாதிபதி செயலகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற "சனாதிபதியிடம் கூறுங்கள்" நிகழ்ச்சித்திட்டம் மூலமும், பிரதம அமைச்சர் அலுவலகம், ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தபால் மாஅதிபருக்கு உரிய ஆலோசனைகள் வழங்குவதும், மேலும் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் உரிய ஆட்கள் அல்லது நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.
- உலக தபால் தினம் 2018 ஐ முன்னிட்டு வினைத்திறன்மிக்க தபால் அலுவலகத்தை தெரிவு செய்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரம், கட்டுரைப் போட்டியை நடாத்தத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- **உலக அஞ்சல் தினம்-2018- முதல்தரமானஅஞ்சல் அலுவலகங்கள்தெரிவு.**

  - உலக அஞ்சல் தினத்தை ஒரு தேசிய விழாவாக சிறப்பிப்பதற்காக அஞ்சல்சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சும், அஞ்சல் திணைக்களமும் இணைந்து நாடளாவியரீதியில் முதல்தரமானஅஞ்சல் அலுவலகங்களைத் தெரிவு செய்தனர்.அதற்காக, முழுமையான பங்களிப்பும், வெளிக்கள பிரயாண ஒழுங்குகளையும் மற்றும் சிபார்சுசெய்யப்பட்ட அஞ்சல் அலுவலகங்களை மேற்பார்வை செய்ய வசதிகளும் வழங்கபட்டன.

  - சிபார்சுசெய்யப்பட்ட அஞ்சல் அலுவலகங்கள் பின்வருமாறு

| மேற்தர அஞ்சல் அலுவலகம் | அஞ்சல் அலுவலகம் 1.ம் **தரம்** | அஞ்சல் அலுவலகம் 2.ம் **தரம்** | உப அஞ்சல் அலுவலகம் |
|---|---|---|---|
| மாத்தறை | அம்பலாந்தொட்டை | கட்டுவன | அமுகொட |
